# MANALI
PETROCHEMICALS

# மணலி பெட்ரோகெமிகல்ஸ் லிமிடெட்


பதிவு அலுவலகம்: ''ஸ்பிக் ஹவுஸ்'', 88 மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032 டெலி•பேக்ஸ் : 044 - 2235 1098.
CIN: L24294TN1986PLC013087, Website: www.manalipetro.com
E-mail: companysecretary@manalipetro.com


## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு
### அஞ்சல் வழி வாக்கெடுப்பு அறிவிக்கையைப் பெற மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்ய கோரிக்கை

கார்ப்பொரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள பல்வேறு பொதுச் சுற்றறிக்கைகளில் கண்டுள்ளபடி சில குறிப்பிட்ட அலுவல்களுக்கு உறுப்பினர்களின் அனுமதி பெற அஞ்சல் வழி வாக்கெடுப்பு கம்பெனிகள் சட்டம் 2013, அதன் விதிகள் மற்றும் மேற்சொன்ன சுற்றறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள வரை முறைகளின் படி நடத்தப்படவுள்ளது.

மேற்சொன்ன சுற்றறிக்கைகளின் படி, அஞ்சல் வழி வாக்கெடுப்பு அறிவிக்கை நிறுவன பங்குதாரர்கட்கு அவர்தம் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு மின்னணு மூலம் மட்டுமே அனுப்பப்படும். இவை நிறுவனத்தின், மற்றும் பங்குச் சந்தைகளின் இணைய தளங்களான www.manalipetro.com, www.bseindia.com மற்றும் www.nseindia.comகளிலும் கிடைக்கப் பெறும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்கெடுப்பு சேவையாளரின் இணையதளத்திலும் பதிவேற்றப்படும்.

**மின்னணு முறையில் பங்குகள் வைத்துள்ள பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் மற்றும் இதர விபரங்களை தத்தம் டெபாசிடரி பார்டிசிபன்ட் மூலம் பதிவு/மாற்றம் செய்து கொள்ளலாம். இப்பங்குதாரர்கள் மேற்சொன்ன ஆவணங்களை மின்னணு முறையில் பெற தத்தம் DP-யிடம் பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**மின்னஞ்சல் முகவரிகளை இதுவரை பதிவு செய்யாத இதர பங்குதாரர்கள் கவனத்திற்கு :**

1. மேற்சொன்ன அறிவிக்கைகளைப் பெற, தங்கள் மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் மற்றும் இதர விபரங்களை நிறுவனத்தின் பதிவாளர் - பங்கு மாற்ற முகவர் காமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் https://investors.cameoindia.com என்ற இணையதள இணைப்பில் கேட்கப்படும் விபரங்களை உள்ளிட்டு பதிவு செய்து கொள்ளலாம்.
2. விபரங்களை, பதிவு அல்லது மாற்றம் செய்திட நிறுவனத்தின் இணைய தளத்தில் https://www.manalipetro.com/investor-service-requests-physical-shares-2/ என்னும் இணைப்பில் உள்ள Form ISR-1 படிவத்தைப் பதிவிறக்கம் செய்து நிரப்பி, தேவையான சான்றுகளுடன் ஸ்கேன் செய்து kyc@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது அஞ்சல்/தூதஞ்சல் மூலம் சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை 600 002 என்ற முகவரிக்கோ அனுப்பலாம்.

பங்குதாரர்கள் கூடுமானவரையில் விண்ணப்பங்களையும், ஆவணங்களையும் நேரடியாக அனுப்பாமல் மின்னணு மூலம் பரிமாற்றம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அஞ்சல் வழி வாக்கெடுப்பில் தொலைதூர மின்னணு வாக்களித்தலுக்கான விபரங்கள் அஞ்சல் வழி வாக்கெடுப்பு அறிவிக்கையில் இடம் பெறும்.

இந்தப் பொது அறிவிப்பானது நிறுவனத்தின் பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி, மற்றும் இதர விபரங்களை/மாற்றங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள ஏதுவாக வெளியிடப்படுகிறது. பங்குதாரர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மேற்படி அறிவிக்கையை நிறுவனம் சரியான நேரத்தில் தங்களுக்கு அனுப்பிட உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு, காமியோ நிறுவனத்தை 044 - 2846 0390 / 4002 0700 என்ற தொலைபேசி எண்ணிலோ, மேற்கூறிய மின்னஞ்சல் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

**மணலி பெட்ரோகெமிகல்ஸ் நிறுவனத்திற்காக**

இடம்: சென்னை
இரா. கோதண்டராமன்
தேதி : 18.02.2022
**நிறுவனச் செயலர்**